

கடலூர் மேற்கு மாவட்டம் திட்டக்குடி சட்டமன்றத் தொகுதி நல்லூர் தெற்கு ஒன்றியம் தீவளூர் ஊராட்சியில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் சி.வி.கணேசன் "உங்களுடன் ஸ்டாலின்" முகாமை துவக்கி வைத்து பொது மக்களுக்கு அரசின் பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

## விழுப்புரம் தெற்கு மாவட்டம்

# திருவெண்ணைநல்லூர் மேற்கு, திருவெண்ணைநல்லூர் மத்திய - விக்கிரவாண்டி வடக்கு, விக்கிரவாண்டி மேற்கு, விக்கிரவாண்டி மத்திய, விக்கிரவாண்டி கிழக்கு - திருக்கோவிலூர் கிழக்கு, திருக்கோவிலூர் மத்திய ஆகிய ஒன்றியங்களில் அடங்கியுள்ள ஊராட்சிகள் விவரம் - மற்றும் ஒன்றிய பொறுப்பாளர்கள் நியமனம்!

### தலைமைக் கழகம் அறிவிப்பு!

கழக நிர்வாக வசதிக்காகவும் - கழகப் பணிகள் செவ்வனே நடைபெற்றிடவும் விழுப்புரம் தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட, திருவெண்ணைநல்லூர் மேற்கு ஒன்றியம், **திருவெண்ணைநல்லூர் மேற்கு, திருவெண்ணைநல்லூர் மத்திய** ஆகிய 2 ஒன்றியக் கழகங்களாகவும் – விக்கிரவாண்டி கிழக்கு, விக்கிரவாண்டி மேற்கு, விக்கிரவாண்டி மத்திய ஆகிய மூன்று ஒன்றியங்கள், **விக்கிரவாண்டி வடக்கு, விக்கிரவாண்டி மேற்கு, விக்கிரவாண்டி மத்திய, விக்கிரவாண்டி கிழக்கு** ஆகிய 4 ஒன்றியக் கழகங்களாகவும் - திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம் **திருக்கோவிலூர் கிழக்கு, திருக்கோவிலூர் மத்திய** ஆகிய 2 ஒன்றியங்களாக பிரிக்கப்படுகிறது. அவ்வாறு பிரிக்கப்பட்ட ஒன்றியங்களுக்கு, ஒன்றிய பொறுப்பாளர் கள் நியமிக்கப்படுகின்றனர்.

மேற்கண்டவாறு பிரிக்கப்பட்ட **திருவெண்ணைநல்லூர் மேற்கு, திருவெண்ணைநல்லூர் மத்திய – விக்கிரவாண்டி வடக்கு, விக்கிரவாண்டி மேற்கு, விக்கிரவாண்டி மத்திய, விக்கிரவாண்டி கிழக்கு – திருக்கோவிலூர் கிழக்கு, திருக்கோவிலூர் மத்திய** ஆகிய ஒன்றியங்கள் பின்வரும் ஊராட்சிகள் கொண்டதாக அமையும்.

**திருவெண்ணைநல்லூர் மேற்கு ஒன்றியம் :** 1.பேரங்கியூர், 2.வளையாம்பட்டு, 3.மேலமங்கலம், 4.செம்மார், 5.எரளூர், 6.ஏனாதிமங்கலம், 7.சிறுவானூர், 8.ஏமப்பூர், 9.மழவராயனூர், 10.மழையம்பட்டு, 11.சின்னசெவலை, 12.மணக்குப்பம், 13.தி.புதுப்பாளையம், 14.அண்டராயநல்லூர், 15.தடுத்தாட்கொண்டூர் ஆகிய 15 ஊராட்சிகள் மற்றும் திருவெண்ணைநல்லூர் பேரூர்.

**திருவெண்ணைநல்லூர் மத்திய ஒன்றியம்:** 1.தி.எடையார், 2.சிறுமதுரை, 3.இளந்துரை, 4.பனப்பாக்கம், 5.பாவந்தூர், 6.பெண்ணைவலம், 7.தி.கொணலவாடி, 8.அருங்குறுக்கை, 9.தி.எடப்பாளையம், 10.சி.மெய்யூர், 11.சித்தலிங்கமடம் ஆகிய 11 ஊராட்சிகள்

**விக்கிரவாண்டி வடக்கு ஒன்றியம் :** 1.செ.புதூர், 2.நகர், 3.இ.மண்டகப்பட்டு, 4.பிரம்மதேசம், 5.திருநந்திபுரம், 6.செ.குன்னத்தூர், 7.பிடாரிப்பட்டு, 8.எண்ணாயிரம், 9.எசாலம் ஆகிய 9 ஊராட்சிகள்.

**விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம் :** 1.வேம்பி, 2.வேலியந்தல், 3.குண்டலப்புலியூர், 4.தென்பேர், 5.நரசிங்கனூர், 6.டி.புதுப்பாளையம், 7.நேமூர், 8.நந்திவாடி, 9.ஈச்சங்குப்பம், 10.முட்டத்தூர், 11.கொட்டியாம்பூண்டி, 12.ஆசூர், 13.உலகலாம்பூண்டி, 14.பொன்னங்குப்பம் ஆகிய 14 ஊராட்சிகள்.

**விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம் :** 1.முண்டியம்பாக்கம், 2.ஒரத்தூர், 3.பாப்பனப்பட்டு, 4.வி.சாத்தனூர், 5.மேலக்கொந்தை, 6.சின்னத்தச்சூர், 7.கொங்கராம்பூண்டி, 8.வி.சாலை, 9.குத்தாம்பூண்டி, 10.ரெட்டிக்குப்பம், 11.ஆவுடையார்பட்டு, 12.கயத்தூர், 13.பனப்பாக்கம், 14.தும்பூர், 15.கஸ்பாக்காரனை ஆகிய 15 ஊராட்சிகள்.

**விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம் :** 1.அய்யூர் அகரம் சிந்தாமணி, 2.வடகுச்சிபாளையம், 3.பனையபுரம், 4.கப்பியம்புலியூர், 5.தொராவி, 6.வெட்டுக்காடு, 7.ராதாபுரம், 8.மதுரப்பாக்கம், 9.தென்னவராயன்பாட்டு, 10.மூங்கில்பட்டு, 11.வா.பகண்டை, 12.வாக்கஊர், 13.சிறுவள்ளிக்குப்பம் ஆகிய 13 ஊராட்சிகள் மற்றும் விக்கிரவாண்டி பேரூர்.

**திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம் :** 1.டி.அத்திப்பாக்கம், 2.நெடுங்கம்பட்டு, 3.கொழுந்திராம்பட்டு, 4.சொரையப்பட்டு, 5.கழுமலம், 6.விளந்தை, 7.குலதீபமங்கலம், 8.சடைக்கட்டி, 9.தேவியகரம், 10.ஆவியூர், 11.ஆவிகொளப்பாக்கம், 12.வடக்குநெமிலில் ஆகிய 12 ஊராட்சிகள்.

**திருக்கோவிலூர் மத்திய ஒன்றியம் :** 1.டி.கொடியூர், 2.வில்லிவலம், 3.வடலையனூர், 4.காட்டுப்பையூர், 5.வடமருதூர், 6.எல்ராம்பட்டு, 7.முதலூர், 8.அத்தண்டமருதூர் ஆகிய 8 ஊராட்சிகள்.

**ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் நியமனம்**

மேற்கண்டவாறு அமையப் பெற்ற **திருவெண்ணைநல்லூர் மேற்கு, திருவெண்ணைநல்லூர் மத்திய – விக்கிரவாண்டி வடக்கு, விக்கிரவாண்டி மேற்கு, விக்கிரவாண்டி மத்திய, விக்கிரவாண்டி கிழக்கு – திருக்கோவிலூர் கிழக்கு, திருக்கோவிலூர் மத்திய** ஆகிய ஒன்றியக் கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்கள் பின்வருமாறு நியமிக்கப்படுகிறார்கள்.

**திருவெண்ணைநல்லூர் மேற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **சு.விசுவநாதன்**, 2/92, அய்யர் தெரு, பேரங்கியூர் அஞ்சல், திருவெண்ணைநல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 607 107.

**திருவெண்ணைநல்லூர் மத்திய ஒன்றியம்**

பொறுப்பாளர் : **கை.ரா. சடகோபன்**, 4/24, மெயின் ரோடு, பல்லரிப்பாளையம், சி.மெய்யூர் அஞ்சல், திருவெண்ணைநல்லூர் வட்டம், விழுப்புரம் மாவட்டம்-605 803.

**விக்கிரவாண்டி வடக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **வே. கில்பர்ட் ராஜ்**, கோழிப்பண்ணை தெரு, செ.புதூர், விக்கிரவாண்டி வட்டம், விழுப்புரம் மாவட்டம் - 605 203.

**விக்கிரவாண்டி மேற்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **வேம்பி ஜெ. ரவி**, திரௌபதியம்மன் கோவில் தெரு, வேம்பி - அஞ்சல், விழுப்புரம் மாவட்டம் - 605 203.

**விக்கிரவாண்டி மத்திய ஒன்றியம்**

பொறுப்பாளர் : **ஜெ. ஜெயபாலமுருகன்**, திரு.வி.க. தெரு, முண்டியம்பாக்கம் - அஞ்சல், விழுப்புரம் மாவட்டம்

**விக்கிரவாண்டி கிழக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **ஜெய.ரவிதுரை**, பழைய போஸ்ட் ஆபீஸ் தெரு, சிந்தாமணி அஞ்சல், விழுப்புரம் மாவட்டம் - 605 601.

**திருக்கோவிலூர் கிழக்கு ஒன்றியம்**

பொறுப்பாளர் : **மு. தங்கம்**, 10, கர்ணம் தெரு, திருக்கோவிலூர், விழுப்புரம் மாவட்டம் - 605 757.

**திருக்கோவிலூர் மத்திய ஒன்றியம்**

பொறுப்பாளர் : **கு. தீனதயாளன்**, 1/37, கடலூர் மெயின்ரோடு டி.குன்னத்தூர் - அஞ்சல், திருக்கோவிலூர் வட்டம். விழுப்புரம் மாவட்டம் - 605 803.

"**அண்ணா அறிவாலயம்**"
சென்னை - 18
நாள்- 08.10.2025

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்,
தி.மு.க.

# கடமை தவறாத கொள்கைப் பேனா!

## (அக்டோபர் 10- முரசொலி செல்வம் நினைவு நாள்)



**வெ**ற்றியிலும் தோல்வியிலும் மனதை சமநிலையில் வைத்திருப்பது அத்தனை எளிதல்ல. ஆனால், அத்தகைய மனநிலையைப் பெற்றவர்களே எந்தத் தருணத்திலும் தன் வலிமையை இழக்காதவர்களாக இருப்பார்கள். 1962 சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க.வினர் 50 பேர் வெற்றி பெற்று சட்டமன்றம் சென்ற நிலையில், கட்சியின் நிறுவனரான பேரறிஞர் அண்ணா அவருடைய காஞ்சிபுரம் தொகுதியில் வெற்றி வாய்ப்பை இழந்தார். அந்த நிலையில் அவருடைய மனநிலை எப்படி இருந்தது, அதை எப்படி சமநிலைக்கு கொண்டு வந்தார் என்பதை திராவிட நாடு இதழில் அவர் எழுதிய 'அறுவடையும் அணிவகுப்பும்' என்ற கடிதத்தில் காண முடியும்.

ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டு, அந்தப் பழியைத் தூக்கி "தி.மு.க. மீது அபாண்டமாக போடப்பட்ட 1991 தேர்தல் களத்தில், வெற்றிக்கான வாய்ப்பே இல்லை என்ற நிலையிலும் கலைஞர் சோர்ந்துவிடவில்லை. ஊர் ஊராக பரப்புரைப் பயணம் மேற்கொண்டு, தி.மு.க. என்கிற வெளிப்படைத் தன்மை கொண்ட ஜனநாயக இயக்கம் தேர்தல் களத்தில்தான் அரசியல் எதிரிகளுடன் மோதுமே தவிர, ஒரு போதும் இப்படிப்பட்ட கொலை பாதக செயலில் ஈடுபடாது" என்பதை விளக்கினார்.

அண்ணாவும் கலைஞரும் அரசியல் தலைவர்கள் மட்டுமல்ல, பத்திரிகையாளர்கள். மக்களின் மனநிலை, களநிலவரம், பலம்-பலவீனம் எல்லாவற்றையும் அறிந்துகொள்வதில் ஆர்வமாக இருப்பார்கள். வெற்றி-தோல்வியைக் கடந்த சமநிலை மனது அவர்களுக்கு உண்டு. அரசியல் இயக்கங்களைச் சார்ந்த பத்திரிகையாளர்களுக்கு இந்த மனநிலை மிகவும் முக்கியமானது.

அண்ணாவை அறிந்தவரும் கலைஞரால் வளர்க்கப்பட்டவருமான முரசொலி செல்வம் சாரிடம் மனதின் சமநிலையை நேரில் பார்த்திருக்கிறேன். 1991 ஜனவரியில் தி.மு.க. ஆட்சி கலைக்கப்பட்ட இரவில், கலைஞரும் மாறனும் முரசொலி அலுவலகத்திற்கு வர இயலாத நிலையில், முரசொலி செல்வம்தான், ஆட்சிக்கலைப்பின் பின்னணியில் நடந்த அரசியல் சதிகளைத் தொகுத்து எழுதி, 'ஜனநாயகப் படுகொலை' என்று தலைப்பிட்டு செய்தி வெளியிட்டார்.



**கோவி லெனின்**
கழக தகவல் தொழில்நுட்ப அணி ஆலோசகர்

அதே ஆண்டு மே மாதத்தில் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்ட இரவில், முரசொலி அலுவலகம் சூறையாடப்பட்டு, தீவைத்து எரிக்கப்பட்ட நிலையிலும், மறுநாள் காலையில் முரசொலி இதழ் உடன்பிறப்புகளின் கைகளில் போய்ச் சேர்ந்தது. செல்வம் சார்தான் அத்தனை பணிகளையும் இழுத்துப் போட்டுக் கொண்டு செய்து, வெற்றிகரமாக முடித்தார்.

1991 தேர்தலில் தி.மு.க. ஒரேயொரு எம்.எல்.ஏ.வைப் பெற்ற நிலையில், சட்டமன்றத்தில் எதிர்க்கட்சி இல்லாத நிலையில், அந்தப் பணியை செய்தது முரசொலிதான். அதற்காக முரசொலி செல்வம் மீது உரிமை மீறல் பிரச்சினையைக் கொண்டு வந்து அவரை சட்டமன்றத்தில் கூண்டில் ஏற்றி விசாரித்தது ஜெயலலிதா அரசு. இந்திய ஜனநாயகத்தில் சட்டமன்றத்தில் விசாரணைக் கூண்டு கொண்டு வரப்பட்ட அவலம் அப்போதுதான் நிகழ்ந்தது. கூண்டிலேறிய செல்வம், ஒரு பத்திரிகையாளராக தன்னுடைய பணியை செய்ததை துணிவுடன் பதிவு செய்தார்.

அ.தி.மு.க.வினரும் பிற எதிர்க்கட்சிகளும் உருட்டுகின்ற சர்க்காரியா கமிஷன் என்பது என்ன, அதன் விசாரணை எப்படி நடைபெற்றது, அதில் எம்.ஜி.ஆர். அழுத்த பஸ்ம எப்படிப்பட்டது, கமிஷன் விசாரணையில் எங்குமே குறிப்பிடப்படாத 'விஞ்ஞான ஊழல்' என்ற வார்த்தையை அரசியல் மனப்பிறழ்வாளர்கள் தொடர்ந்து பயன்படுத்தும் அயோக்கியத்தனம் அனைத்தையும் விளக்கி ஒரு புத்தகமாக எழுதியவர் முரசொலி செல்வம்.

அவருடைய எழுத்தில் உருவான மற்றொரு புத்தகமான, 'முரசொலி-சில நினைவுகள்' அரை நூற்றாண்டுகால அரசியல் வரலாற்றையும் அதில் முரசொலி எதிர்கொண்ட சவால்களையும் விளக்கும் வரலாற்று ஆவணம்.

'சிலந்தி' என்ற பெயரில் முரசொலியில் வெளியான ஆணித்தரமான கட்டுரைகளை எழுதியவர் முரசொலி செல்வம்தான் என்பதை தி.மு.க நிர்வாகிகள் பலரே அவரது இறப்புக்குப் பிறகுதான் அறிந்து கொண்டனர்.

தன்னை முன்னிலைப்படுத்தி விளம்பரப்படுத்திக் கொள்வதில் முனைப்பு காட்டாமல், இயக்கத்தின் வலிமைக்குத் துணை நிற்பதே இயக்கப் பத்திரிகையாளரின் கடமை. அந்தக் கடமை தவறாத கொள்கை வீரர் முரசொலி செல்வம்.

## தஞ்சாவூர் வடக்கு மாவட்டம் – திருவிடை மருதூர் தொகுதி

# கழக சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம்!

## அமைச்சர் கோவி.செழியன் அழைப்பு!



தஞ்சை, அக். 11 - தஞ்சாவூர் வடக்கு மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பு அணிகளின் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் குறித்து மாநில வர்த்தகர் அணி துணைத் தலைவர் முனைவர் கோவி. செழியன் விடுத்துள்ள அழைப்பு வருமாறு:-

தஞ்சாவூர் வடக்கு மாவட்டம், திருவிடை மருதூர் சட்டமன்ற தொகுதி தி.மு.க. சார்பு அணிகள் நிர்வாகிகள் கலந்துரையாடல் கூட்டம் 11.10.2025, 12.10.2025 மற்றும் 13.10.2025 ஆகிய நாட்களில் நடைபெற உள்ளது.

தஞ்சாவூர் மாவட்டம், திருவிடைமருதூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திருவிடைமருதூர் வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு, திருப்பனந்தாள் - கிழக்கு, மேற்கு, மத்திய, கும்பகோணம் - கிழக்கு, மத்திய ஒன்றியம் மற்றும் பேரூர் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் பங்கேற்கும் கலந்துரையாடல் கூட்டம் திருவிடைமருதூர் கலைஞர் பாசறையில் மாவட்டக் கழக பொறுப்பாளர் சாக்கோட்டை க. அன்பழகன் எம்.எல்.ஏ., உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், சு. கல்யாணசுந்தரம் எம்.பி., கழக சட்ட திட்டத்திருத்தக் குழு தலைவர் செ. இராமலிங்கம், முனைவர் செ. குறிஞ்சிவாணன் தொகுதி பொறுப்பாளர் ஆகியோர் முன்னிலையில் நடைபெற உள்ளது. அதன் விவரம் பின்வருமாறு:

11.10.2025 - சனிக்கிழமை நேரம், அணிகளின் விவரம்:

காலை 09.00 மணி - இளைஞர் அணி, காலை 10.00 மணி - தகவல் தொழில்நுட்ப அணி, காலை 11.00 மணி - பொறியாளர் அணி, நண்பகல் 12.00 மணி- விளையாட்டு மேம்பாட்டு அணி,பிற்பகல் 03.00 மணி- தொழிலாளர் அணி,மாலை 04.00 மணி- அமைப்பு சாரா ஆட்டோ ஓட்டுநர்,மாலை 05.00 மணி- மருத்துவர் அணி, மாலை 06.00 மணி- ஆதிதிராவிடர் நலக் குழு

12.10.2025 ஞாயிற்றுக் கிழமை நேரம், அணிகளின் விவரம்:

காலை 09.00 மணி- மாணவர்அணி, காலை 10.00 மணி - வழக்கறிஞர் அணி, காலை 11.00 மணி- வர்த்தகர் அணி,நண்பகல் 12.00 மணி -கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை, பிற்பகல் 03.00 மணி- சுற்றுச்சூழல் அணி,மாலை 04.00 மணி-நெசவாளர்கள் அணி, மாலை 05.00 மணி- சிறுபான்மையினர் நல உரிமை பிரிவு 13.10.2025 திங்கட் கிழமை, அணிகளின் விவரம்:

காலை 09.00 மணி-மகளிர், அணி, காலை 10.00 மணி- மகளிர் தொண்டர் அணி, காலை 11.00 மணி- விவசாய அணி, நண்பகல் 12.00 மணி- இலக்கிய அணி, பிற்பகல் 03.00 மணி- தொண்டர் அணி, மாலை 04.00 மணி-விவசாய தொழிலாளர் அணி, மாலை 05.00 மணி-அயலக அணி,8 மாலை 06.00 மணி- மீனவர் அணி.

எனவே இக்கூட்டத்தில் மாநில நிர்வாகிகள், மாவட்ட நிர்வாகிகள், கிளைக் கழக செயலாளர்கள், பாக முகவர்கள், BLA2, BDA முகவர்கள் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



திருக்கோவிலூர் சட்டமன்றத் தொகுதி, திருக்கோவிலூர் அணைக்கட்டு பராமரிப்பு பணியை விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர்.பொன்.கௌதமசிகாமணி நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணை செயலாளர் டி.என்.முருகன், ஒன்றிய செயலாளர்கள் ஜி.ரவிச்சந்திரன், அ.சா.ஏ.பிரபு, எஸ்.லூயிஸ், நகர செயலாளர் கோபி கிருஷ்ணன், ஒன்றிய நிர்வாகிகள் தீனதயாளன், முருகையன் , நகர மன்ற துணை தலைவர் குணா மற்றும் பலர் உடனிருந்தனர்.